ஆண்டு பட்டிகை வழக்கு எண்.50/2025

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 50/2025 LW– 2 PW– 2

| | |
|---|---|
| Name | : ரஞ்சித் (கண்ணுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : ராஜேந்திரன் |
| Village | : பாலப்பநாயக்கன்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 36/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of March 2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். சம்பவ சமயம் நான் ஆட்டோ ஓட்டுநராக வேலை பார்த்து வந்தேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். அவர் எனது ஊரைச் சேர்ந்தவர். ஆஜர் எதிரியை தெரியாது. சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் மதியம் 4.00 மணியளவில் நான் ஆட்டோவில் சவாரி ஏற்றிக்கொண்டு வத்திபட்டி சென்று இறக்கிவிட்டுவிட்டு மீண்டும் நத்தம்–வத்திபட்டி சாலையில் கோமணாம்பட்டி விலக்கை தாண்டி வடக்கிலிருந்து தெற்காக சென்று கொண்டிருந்தபோது அதே சாலையில் தெற்கிலிருந்து வடக்காக தவறான பாதையில் ராஜேந்திரன் என்பவர் அவரது மனைவி சுமதி என்பவருடன் இருசக்கரவாகனத்தில் சென்றார். நான் அவர் அவ்வாறு செல்வதை பார்த்துவிட்டு சென்றுகொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டு மீண்டும் கோமணாம்பட்டி விலக்கிற்கு சென்று பார்த்தபோது சுமதி என்பவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்று

சொன்னார்கள். ராஜேந்திரன் என்பவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும் பின்னர் கேள்விபட்டேன். நான் சென்றபோது கூட்டமாக இருந்ததால் வேறு எந்த விபரமும் தெரியவில்லை. எந்த வண்டி மீது மோதி விபத்து ஏற்பட்டது என்று தெரியாது. போலீசார் என்னை விசாரித்தபோது சம்பவத்தை பார்க்கவில்லை என்று சொன்னேன்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

2. போலீஸ் விசாரணையில் கடந்த 22.12.2024ம் தேதி மதியம் சுமார் 3.45 மணியளவில் நான் வத்திபட்டிக்கு சவாரி செல்வதற்காக நத்தம்– மதுரை செல்லும் பைபாஸ் ரோட்டில் சாத்தாம்பாடி பிரிவு அருகே ஆட்டோவில் சென்று கொண்டிருந்தபோது எனக்கு முன்னால் எனது ஊரைச்சேர்ந்த ராஜேந்திரனும், அவரது மனைவி சுமதியும் இருசக்கர வாகனமான TN 57 K 0357 என்ற ஹீரோ ே ஹாண்டா ஸ்பிளண்டர் வாகனத்தில் நத்தம்– மதுரை செல்லும் பைபாஸ் ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சாலை ஓரமாக வந்தவர்கள் அவர்கள் வீட்டிற்கு செல்வதற்காக மேற்படி பைபாஸ் சாலையை கடக்க கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ரோட்டை குறுக்காக அவர்கள் கடந்து சென்றபோது, அதே ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி KA 01 MF 8552 என்ற பதிவெண் கொண்ட ஸ்விப்ட் காரை பின்னால் விசாரித்து தெரிந்து கொண்ட பெங்களூரை சேர்ந்த ஜெயக்கொடி மகன் ரஞ்சித் என்பவர் மேற்படி காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் போட்டி வந்து ராஜேந்திரனும், அவரது மனைவி சுமதியும் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் அவர்கள் இருவரும் தூக்கி வீசப்பட்டு ரோட்டில் கீழே கிடந்தார்கள் என்றால் சரியல்ல, நான் ஓடி சென்று பார்த்த போது சுமதிக்கு தாடை, இடது கன்னம், வலது முழங்கை ஆகிய இடங்களில் பலத்த ரத்த காயங்கள் ஏற்பட்டு இருந்தது என்றால் சரியல்ல. ராஜேந்திரனுக்கு வலது கை, வலது கால், தலையின் பின்புறம்

ஆகிய இடங்களில் ரத்த காயங்கள் ஏற்பட்டும் ரோட்டில் கிடந்தார் என்றால் சரியல்ல. இதைப் பார்த்த நான் ராஜேந்திரனின் மகன் இளவரசனுக்கு போன் மூலம் தகவல் சொன்னேன் என்றால் சரியல்ல. சத்தம் கேட்டு அருகில் இருந்தவர்களும் அங்கு வந்து சம்பவத்தை பார்த்து 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்தார்கள் என்றாலும் தகவல் கிடைத்து சிறிது நேரத்தில் இளவரசனும் அங்கு வந்துவிட்டார் என்றாலும் சரியல்ல. 108 ஆம்புலன்ஸில் வந்தவர்கள் சுமதி என்பவரை பரிசோதித்து பார்த்து அவர் இறந்து விட்டதாக கூறினார்கள் என்றால் சரிதான். ராஜேந்திரன் என்பவரை மட்டும் 108 ஆம்புலன்ஸில் ஏற்றி நத்தம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். மேற்படி விபரங்கள் தெரியும் என்று போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. எதிரி கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவரை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சாத்தாம்பாடி பிரிவிலிருந்து நத்தம் முடக்குச்சாலை ஆனது சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் இருக்குமா என்றால் இருக்கும். நத்தம் முடக்குச் சாலையில் உள்ள வீடுகள் அனைத்தும் சாலையின் கிழக்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். முடக்கு சாலையில் இருந்து சாத்தாம்பாடி பிரிவிற்கு வருவதற்கு வத்திபட்டி சென்று அங்கிருந்து மதுரை–நத்தம் சாலையில் மேற்கு பக்கம் பிரிவிற்கு வந்து பின்னர் சாத்தாம்பாடி பிரிவிற்கு வரவேண்டும் என்றால் சரிதான். நத்தம்–மதுரை தேசிய நெடுஞ்சாலையில் கிழக்கு பக்கம் உள்ள சாலையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்வது சாலை விதிகளின்படி தவறானது என்றால் சரிதான். சாத்தாம்பாடி பிரிவில் கிழக்கிலிருந்து மேற்காக தேசிய நெடுஞ்சாலையை கடப்பதற்கு சிக்னல்களோ அல்லது பேரிகார்ட் தடுப்புகளோ இல்லையென்றால்

சரிதான். இறந்து போன நபர்கள் நத்தம் –மதுரை தேசிய நெடுஞ்சாலையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி எதிர் திசையில் வந்து கிழக்கிலிருந்து மேற்காக திடீரென சாத்தாம்பாடி பிரிவை கடப்பது தவறு என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்ற ராஜேந்திரன் என்பவரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் தான் விபத்து ஏற்பட்டு இறந்ததாக கேள்விப்பட்டேன் என்றால் சரிதான்.

**மறு விசாரணை : இல்லை.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.03.23 15:06:08 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.50/2025

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 50/2025 LW– 5 PW– 3

| | |
|---|---|
| Name | : **வினோத்** (பார்வை மகஜர் சாட்சி) |
| Father's/Husband's Name | : **முத்துக்கிருஷ்ணன்** |
| Village | : **கோமணாம்பட்டி** |
| Taluk | : **நத்தம்** |
| District | : **திண்டுக்கல்** |
| Age | : 33/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of March 2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கறிவெட்டும் வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். சுமார் 7, 8 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் நத்தத்திற்கு வந்துவிட்டு எனது ஊரான கோமணாம்பட்டிக்கு செல்லும் வழியில் விபத்து நடந்தது தொடர்பாக சாத்தாம்பட்டி விலக்கு அருகே போலீசார் விபத்து குறித்து விசாரித்து என்னிடமும், எனது மாமா ராஜா என்பவரிடமும் சாட்சியாக இருக்கக்கேட்டு கையொப்பம் வாங்கினார்கள். (**பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையொப்பம் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) அப்போது மணி சுமார் மாலை 5.00, 5.30 இருக்கும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2) போலீசார் கையொப்பம் வாங்கிய ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்ன விபரம் எழுதி கையொப்பம் வாங்கியதாக

**என்னிடம் விபரம் சொல்லவில்லை என்றால் சரிதான். வேறு எந்த தேதியிலாவது, வேறு நேரத்தில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள என்றால் இல்லை.**

**மறு விசாரணை : இல்லை.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.03.23 15:06:17 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.50/2025

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 50/2025 | LW– 6 | PW– 4 |
| Name | : ராஜா (பார்வை மகஜர் சாட்சி) | | |
| Father's/Husband's Name | : ஊர்காவலன் | | |
| Village | : கோமணாம்பட்டி | | |
| Taluk | : நத்தம் | | |
| District | : திண்டுக்கல் | | |
| Age | : 42/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of March 2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து டீக்கடை வைத்து நடத்தி வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். சுமார் 7, 8 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் நத்தத்திற்கு வந்துவிட்டு எனது ஊரான கோமணாம்பட்டிக்கு செல்லும் வழியில் சாத்தாம்பட்டி விலக்கு அருகே மாலை சுமார் 4.00 முதல் 5.00 மணியளவில் விபத்து நடந்த இடத்தில் கூட்டமாக இருந்தது. விபத்து தொடர்பாக போலீசார் விசாரித்து என்னிடமும், எனது அக்கா மகன் வினோத் என்பவரிடமும் சாட்சியாக இருக்கக்கேட்டு கையொப்பம் வாங்கினார்கள். (**பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையொப்பம் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2) போலீசார் கையொப்பம் வாங்கிய ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்ன விபரம் எழுதி கையொப்பம் வாங்கியதாக என்னிடம் விபரம் சொல்லவில்லை என்றால் சரிதான். வேறு எந்த தேதியிலாவது, வேறு

**நேரத்தில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் ஞாபகமில்லை. வழக்கில் இறந்துபோன ராஜேந்திரன், சுமதி ஆகியோர் எனக்கு பக்கத்து ஊர்க்காரர்கள் என்றால் சரிதான். நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் நானோ, வினோத் என்பவரோ கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோனவர்கள் எனது பக்கத்து ஊரைச்சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாகவும், நஷ்ட ஈடு பெறுவதற்காகவும் கையொப்பம் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.**

**மறு விசாரணை : இல்லை.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.03.23 15:06:25 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்